**<u>சுருக்கம்</u>**

மாற்றுத் திறனாளிகள் நலத்துறை – சென்னை, திருவல்லிக்கேணி, லேடி வெலிங்டன் கல்லூரி வளாகத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரக அலுவலக கட்டடம் – தரைத் தளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளங்களில் உள்கட்டமைப்பு வசதி செய்தல் – கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள ரூ.50,47,307/– நிதி ஒப்பளிப்பு செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (டி) எண்: 1**

**நாள்: 03.01.2018**
**ஹேவிளம்பி – மார்கழி, 19**
**திருவள்ளுவர் ஆண்டு, 2048**

**படிக்கப்பட்டது:**

1 அரசாணை (நிலை) எண் 52, மாற்றுத் திறனாளிகள் நல [மாதிந–1(2)]த் துறை, நாள் 25.10.2011.

2 அரசாணை (நிலை) எண் 42, மாற்றுத் திறனாளிகள் நல [மாதிந–1(2)]த் துறை, நாள் 29.03.2012.

3 அரசாணை (நிலை) எண் 34, மாற்றுத் திறனாளிகள் நல (மாதிந–1)த் துறை, நாள் 15.06.2015.

4 அரசாணை (நிலை) எண் 54, மாற்றுத் திறனாளிகள் நல (மாதிந–1)த் துறை, நாள் 24.11.2015.

5. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித எண் 5000/நிர்–4/2017, நாள் 20.04.2017.

––––

**<u>ஆணை:</u>**

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரகத்திற்கு 5300 சதுர அடியில் சொந்தக் கட்டடத்தினை சென்னை, கே.கே. நகரில் அமைந்துள்ள மாநில வளம் மற்றும் பயிற்சி மைய வளாகத்தில் கட்டுவதற்கு 2011–2012ஆம் ஆண்டு பகுதி–II திட்டத்தின் கீழ் ரூ.80.00 இலட்சத்திற்கு (ரூபாய் எண்பது இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 2011–12ஆம் ஆண்டுக்கான பகுதி–II திட்டத்தின் கீழ் புதுக்கோட்டையில் உள்ள செவித் திறன் குறையுடையோருக்கான பள்ளி மற்றும் விடுதிக் கட்டடம் கட்ட ஒதுக்கப்பட்ட ரூ.80,00,000/– தொகையை மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அலுவலகக் கட்டடத்திற்கு ஏற்கனவே ஒதுக்கப்பட்ட தொகையோடு சேர்த்து, ரூ.1,60,00,000/– நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், சென்னை, திருவல்லிக்கேணி, லேடி வெலிங்டன் கல்லூரி வளாகத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரக அலுவலகக் கட்டடத்தின் முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் கட்டடப் பணிக்கான செலவினத் தொகை ரூ.1,63,90,000/–ற்கான நிர்வாக ஒப்புதலுடன் ரூ.3,90,000/– கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

[த.பி.பா.]

4. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் சென்னை, திருவல்லிக்கேணி, லேடி வெலிங்டன் கல்லூரி வளாகத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரக அலுவலகக் கட்டடத்தின் முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் கட்டடப்பணி விரிவுபடுத்துவதற்கான நிர்வாக ஒப்புதல் மற்றும் ரூ.1,30,00,000/– நிதி ஒதுக்கீடு (2014–15 ஆண்டு ரூ.12 இலட்சம் + 4% மதிப்பீடு 2015–2016ஆம் ஆண்டு) செய்து மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

5. மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள், சென்னை, திருவல்லிக்கேணி, லேடி வெலிங்டன் கல்லூரி வளாகத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரகத்திற்கான அலுவலக கட்டடத்தின் முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் உள்கட்டமைப்பு வசதிக்கான கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்காக செலவினத் தொகை ரூ.54.25 இலட்சம் கூடுதல் நிதி ஒதுக்கீடு வழங்கி அனுமதி ஆணை வழங்குமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

6. மேற்படி மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவை பரிசீனை செய்த அரசு, அதனை ஏற்று, சென்னை, திருவல்லிக்கேணி, லேடி வெலிங்டன் கல்லூரி வளாகத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரக அலுவலக கட்டடத்தின் தரைத் தளம், முதல் தளம், இரண்டாம் தளங்களில் உள்கட்டமைப்பு வசதிகளுக்கான கட்டுமானப் பணிகளை ரூ.50,47,307/– (ரூபாய் ஐம்பது இலட்சத்து நாற்பத்தி ஏழாயிரத்து முன்னூற்று ஏழு மட்டும்) மதிப்பீட்டில் மேற்கொள்ள நிருவாக மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

7. மேலே பத்தி–6ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

''4235 – சமூகப் பாதுகாப்பு நலன் குறித்த மூலதனச் செலவு – 02 – சமூக நலன் – 101 – ஊனமுற்றோர் நலன் – மாநில செலவினங்கள் – JU கட்டடங்கள் – 16 – பெரும் பணிகள்''

[த.தொகு. 4235 02 101 JU 1601]

8. மேலே பத்தி–6ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினத் தொகை ரூ.50,47,307/– 2017–2018ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். எனினும் 2017–2018ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் ஒரு குறிப்பிட்ட தொகையினை சேர்ப்பதன் மூலம் இச்செலவினம் சட்டப் பேரவையின் பார்வைக்கு கொண்டு செல்லப்பட வேண்டும். அவ்வாறு நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, மேலே பத்தி–6ல் அனுமதிக்கப்பட்ட தொகையினை பெற்று தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), பொதுப்பணித் துறை அவர்களுக்கு வழங்கிட மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், 2017–2018ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் இத்தொகை சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக் குறிப்பினையும் மற்றும் திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது நிதி (ச.ந)/வ.செ.பொ–I) துறைக்கு உரிய நேரத்தில் அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

[த.பி.பா.]

9. இவ்வாணை, நிதித் துறையின் அலுவல் சார்பற்ற எண் 64424/நிதி(சந)/2017, நாள் 29.12.2017–ன் படி வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண் 2371 (இரண்டாயிரத்து முன்னூற்று எழுபத்து ஒன்று)

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்
அரசு முதன்மைச் செயலாளர் (மு.கூ.பொ.)

**பெறுநர்**

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–5.
மாநிலக் கணக்காயர், (A&E) சென்னை–18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
முதன்மைப் பொறியாளர் (கட்டடங்கள்) மற்றும்
தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்),
பொதுப் பணித் துறை, சென்னைக் கோட்டம், சென்னை–5.

**நகல்:**

மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டம்)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
நிதி (ச.ந./வ.செ.பொது–I / வ.செ.பொது–II)த் துறை, சென்னை–9.
பொதுப் பணித் (ஒய்.–2) துறை, சென்னை–9.
முதன்மைச் செயலரின் முதன்மைத் தனிச் செயலாளர்,
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சென்னை–9.
இருப்பு தணிக்கை அலுவலர், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.